DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 409/2023 PW : 2

Name : சாருலதா (துணை வட்டாட்சியர்) Age –

W/o : தேவராஜலு Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 10.03.2026

<u>**வாதி தரப்பு முதல் விசாரணை**</u>

நான் தற்போது திருவள்ளூர் தாலுக்கா துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன்.

1) பசலி 1403 முதல் 1432 வரை, சிட்டா மற்றும் அடங்கல் தாக்கல் செய்கிறேன். அதில் பசலி 1406, 1409, 1414, 1415, 1416 ஆகிய பசலிக்குண்டான சிட்டா, அடங்கல் பதிவறையில் இல்லை. நான் தற்போது ஆஜர் செய்யும் சிட்டா, **வா.சா.ஆ.16 வரிசை ஆகும், அடங்கல் வா.சா.ஆ.17 வரிசை.** சர்வே எண்.421/3 ரோஸ் செட்டி என்பவர் பெயரில் உள்ளது. அதன் பட்டா எண்.550 ஆகும். சர்வே எண்.538, பட்டா எண்.550 ரோஸ் செட்டி என்பவர் பெயரில் உள்ளது. சர்வே எண்.540/1 ரோஸ் செட்டி என்பவர் பெயரில் உள்ளது. சர்வே எண்.385/2 மற்றும் 385/3 ஆகியவை ரோஸ் செட்டி என்பவர் பெயரில் உள்ளது. சர்வே எண்.390/பி, 29 மற்றும் 33 ஆகியவை ரோஸ் செட்டி என்பவர் பெயரில் உள்ளது. சர்வே எண்.31 ரோஸ் செட்டி என்பவர் பெயரில் உள்ளது. பசலி 1405 முனிசாமி பெயருக்கு பட்டா மாறியது. ரோஸ் செட்டி மகன் முனிசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது, பட்டா எண் மாறவில்லை. பசலி 1405 என்பது 1996–ஆண்டுக்குரியது. பசலி 1411–ல் முனிசாமி பெயரில் பட்டா எண் 362 ஆக மாற்றப்பட்டுள்ளது. பொதுவாக பழைய பட்டா எண் சூழிக்கப்பட்டு புதிய பட்டா எண் பதியப்படும் போது RPT proceedings or போக்கு பட்டா என்று குறிப்புகள்

காளத்தில் பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு உண்டான பதிவுகள் இல்லை. 1432 பசலியில் 2, 3 பிரதிவாதிகள் பெயரில் சர்வே எண்.538 இரண்டாக உட்பிரிவு செய்யப்பட்டு 538/1-ல் மணிகண்டன் பெயரிலும், 538/2 தினேஷ் பெயரிலும் மாற்றப்பட்டது. அடங்கலில் குறிப்பிட்டுள்ளது மேற்படி அனைத்து நிலங்களும் நெற் பயிர் செய்யும் நிலங்கள் என்றால் சரிதான். வருடத்தில் இரண்டு போகம் நிலையும். சிட்டாவில் என்ன பதிவு செய்யப்பட்டுதோ அது தான் பட்டாவில் இருக்கும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த சிட்டாவில் ஜெயராமசெட்டி மகன் ரோஸ்செட்டி என்பது சூழிக்கப்பட்டு ரோஸ்செட்டியின் மகன் முனுசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். RPT No.38/96.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை செய்ய ஒத்திவைக்கபடுகிறது.**

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.